# சித்தர்களின் வாக்கும் சமூகத்தின் போக்கும்

முனைவர். அ.புஷ்பா
உதவிப்பேராசிரியை, தமிழ்த்துறை,
அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம்,கோயம்புத்தூர் - 43 தமிழ்நாடு.
https://orcid.org/0000-0001-6409-0648?lang=en, nivinareen@gmail.com

10

**ஆய்வுச் சுருக்கம்**

சித்தம் என்பது மனிதர்களின் புத்தி, உள்ளம், மனம், முடிவு என்று பலப் பொருளை விளக்குகின்றது. ஒருவரின் ஒட்டுமொத்தமான மனதின் செயல்முறை தரத்தை நிர்ணயிக்கும் சொல்லாக இச்சொல்லைப் பார்க்க முடியும். தன் இச்சை படி செல்லும் மனதை அடக்கி தன் வசப்படுத்தி நிலைத்திருக்கும் இறைநெறி வழி செலுத்தும் பேரறிவு பெற்றவர்களை சித்தர்கள் எனலாம். நிலையாமையை உணர்ந்து மரணத்தை வென்று உடலை தன் சிந்தைக்கு ஏற்ப இயக்கும் சக்தி கொண்டவர்கள் சித்தர்கள், மனிதன் நோயின்றி வாழ உறுதியான உடல் தேவைப்படுகின்றது. அதனைத் திடப்படுத்த யோகங்கள் அவசியம் என அறிந்து பல வகையான யோகக் கலைகளைக் கண்டறிந்தனர். குறிப்பாக அட்டாங்க யோகம் என்பதில் கைவரப் பெற்றவர்கள் சித்தர்கள். மருத்துவம், கணிதம்,இரசவாதம், தத்துவம், இலக்கியம் ஆகியன ஆத்மீக ஈடுபாடுகளின் வெளிப்பாடுகளாக விளங்குகின்றன. சாதி,மதம், இனம்,சமயம், சடங்குகள் கடந்த நிலையில் சமூகத்திற்குப் பயனுடையவற்றை பிரித்தறிந்து அளித்த அறிஞர்களாகவும் சீர்திருத்தவாதிகளாகவும் சித்தர்கள் விளங்கினர். தெளிவான புரிதலோடு அறநிலை உணர்வைக் கொண்டு மெய்நிலை என்று கூறப்படும் சித்தி எய்திய நிலையை உணர்த்துவது சித்தர் இலக்கியம். உடம்பின் உள்ளே உறுபொருளாகிய பரமாத்மாவைக் கண்டு மகிழ்ந்தவர்கள் சன்மார்க்க சித்தர்கள், ஞான சித்தர்கள், காய சித்தர்கள் என பல்வேறு துறைச் சார்ந்த சித்தர்களையும் அவர்கள் உருவாக்கிய இலக்கியங்களையும் தமிழ் மொழியிலேயே காணக் கிடைப்பது தமிழர்களுக்குக் கிடைத்த பேராகும்.

**திறவுச்சொற்கள் :** சமதர்மம், கானல் நீர்,அன்பு, ஆசை, சினம்,மனம், ஒழுக்கம்.

**முன்னுரை**

மனித குலத்தின் மேன்மைக்காகவே சித்தர்கள் பலப் பயிற்சிகள் செய்து யோக முறைகளைக் கண்டறிந்தனர். உலகத்தையோ இயற்கையையோ அழிக்கும் நோக்கத்தோடு அறிவையும் காலத்தையும் செலவிடாது மனித சமூகம் வாழும் முறை அறிந்து வாழ முயல

வேண்டும் என்பதற்காகவே கிடைத்த ஒரு மானுடப் பிறவி வீணே கழிந்து வெம்பி வாழ்வதற்கு அல்ல பயனுள்ள வாழ்க்கை வாழ்ந்து பரமாத்மாவை அடைவதற்கே என்பதை இலக்காகக் கொண்டு யோக, ஞான மார்க்கத்தைப் பின்பற்றி பலரையும் தங்களின் வழி நடக்க வைத்தவர்கள். அச்சான்றோர்களின் அறிவுரைகள் பயிற்சிகள் கண்டுபிடிப்புகளின் படி இயல்பாக இல்லற வாழ்க்கையில் வாழும் மனிதனும் பின்பற்றி மனதை நெறிப்படுத்திக் கொள்ள முடியும்.

**சமதர்ம சமுதாயம்**

சாதி,இனம்,மதம்,சமய சடங்குகளால் மக்கள் சிதைந்து போவதை சித்தர்கள் விரும்பவில்லை. பிளவுற்று கிடந்த தமிழ்ச் சமூகத்தை ஒருங்கிணைக்கும் நோக்கத்திற்காக ஓர் இறை என்னும் தத்துவத்தைச் சமுதாய பொறுப்போடும் அக்கறையோடும் முன் வைத்தனர். இதனையே பாம்பாட்டி சித்தர்,

" பொய் மதங்கள் போதனை செய் பொய்க் குருக்களைப்
புத்தி சொல்லி நல் நெறியில் போக விடுக்கும்
மெய்ப்பதந்தான் இன்னதென்று மேவ விளம்பும்
மெய்குருவின் பதம் போற்றி ஆடாய் பாம்பே “[1]

என்று கூறுகிறார். பொய்யான போதனைகள் செய்து தவறான புத்தி புகட்டும் வஞ்சகர்களைத் திருத்தி நல்வழியில் வழி நடத்தும் ஆற்றல் கொண்டவரே உண்மையான குரு. மனிதனுக்குத் துன்பம் மற்றும் கவலையிலிருந்து விடுதலை அளித்து உண்மை மதத்தைக் கூறி வழி நடத்துபவரே உண்மையான குரு. காலம் காலமாக மதத்தாலும் இனத்தாலும் சாதியாலும் மக்களைப் பிரித்தாண்டு அரசியல் செய்து ஆதிக்கம் செலுத்தி வரும் மேல் வர்க்கம் முதல் அன்றாடங்காட்சி வரை போலியான நிம்மதியற்ற வாழ்க்கையே வாழ்ந்து வருகின்றனர். அன்று முதல் இன்று வரை மக்களை ஒற்றுமையுடன் வாழ விடாமல் பிரித்து வைத்து ஆளுமை செலுத்தி வருபவர்கள் பகுத்தறிவாளர்கள் அல்ல. இதனை விட்டொழிப்பவர்களே சிறந்த மனிதத்தன்மை கொண்டவர்கள்.

**வாழ்க்கையொரு கானல் நீர்**

கோடை நாட்களில், வெம்மை அதிகமாக இருக்கும் காலங்களில் பாலைவனங்களிலும் தார் சாலைகளிலும் நீர் இருப்பது போன்ற மாயத் தோற்றம் காணப்படும் ஆனால் அருகில் சென்று பார்த்தால் ஒன்றும் இருக்காது இதனையே கானல் நீர் என்கிறோம். ஒளியானது ஊடுருவும் போது முழு அக தெறிப்பு நிகழ்ந்து ஒளி முறிவு பெற்று போலியான தோற்றம் அளிக்கிறது.இது போன்று தான் வாழ்க்கையும் நிலையாமை கொண்டது. உள்ளங்கையில் உள்ள நீரானது எவ்வளவு நேரம் கீழே விழுந்து வீணாகாமல் இருக்குமோ அவ்வளவே நாம் வாழும் வாழ்க்கை இதனையே

வள்ளுவர் ,

"நில்லாத வற்றை நிலையின என்றுணரும்
புல்லறி வாண்மை கடை" [2]

என்று நிலைத்து நிற்காத பொருள்களை எல்லாம் நிலையானவை என்று எண்ணி மயங்குகின்ற இழிவான அறிவுடைமையானது மிகவும் தாழ்ந்தது என்று சுட்டுகிறார்.

பாம்பாட்டி சித்தர் கூறுகையில்,

"கானலை மான் நீர் எனவே கண்டு செலல் போல்
காசினிவாழ்வினை மூட கண்டு களிப்பார்
மேல்நிலை கண் டார்கள் வீணாய் வம்பு பேசிடார்
மெய்யன் பதம் நாடுவார் என்று ஆடாய் பாம்பே"[3]

என்பதன் மூலம் தன்னலம் இல்லாத வாழ்க்கையானது தவ வாழ்க்கை. நிலையில்லாத உலகப் பொருள்கள் மீது நாட்டம் கொண்டு சக மனிதனை மனிதனாக எண்ணாமல் பகையாகக்கருதி கொலை, கொள்ளை, சூது என தகாத செயல்கள் புரிந்து தான் மட்டும் வாழ எண்ணி வாழ்வின் உண்மை பொருளைப் பின்பற்ற மறந்தால் இப்பிறப்பே வீணாகிவிடும் என்பதை அழுத்தமாக முன்வைக்கின்றார்.

**அன்பிலார் வாழ்க்கை**

அன்பு என்பது அளப்பரிய ஆற்றல் கொண்டது எதையும் சாதிக்க வல்லது அதை சரியாகப் பயன்படுத்தினால் பக்குவப்படுத்தும் தவறாக பயன்படுத்தினால் அது நம்மையே பதம் பார்த்து விடும்.

" அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு"[4]

என்று சுயநலமாக வாழ்வதற்குக் காரணமே அன்பு இல்லாமை என்பார் வள்ளுவர். அன்புள்ளவரும் ஆசை அழிந்தோருமே முக்தி நிலையை அடைய முடியும் என்கிறார் பாம்பாட்டி சித்தர்,

"எள்ளளவும் அன்பகத்தில் இல்லாதார் முக்தி
எய்துவது தொல் உலகில் இல்லை எனவே
கள்ளப்புலன் கட்டறுத்துக் கால காலத்தைக்
கண்டு கொடுத்தே களித்து ஆடாய் பாம்பே"[5]

என்பதன் மூலம் அன்பு கொண்டு கள்ளப் புலன்களாகிய மெய், வாய்,கண்,மூக்கு,செவி ஆகியவற்றை தன் வசமாக்கி ஆள்பவரே இறைவனைக் காண முடியும் என்பது தெளிவாகின்றது.

**மனமும் சினமும்**

மனம் என்பது சிந்தனை, உணர்ச்சி, கற்பனை,மனஉறுதி, நோக்கு, உள்ளம் என பல பரிமானங்களைப் பெற்றிருந்தாலும் உள்ளுணர்வையே பெரிதும் சுட்டுகிறது.

“மனம் என்னும் மாடு அடங்கின்
தாண்டவகோனே! முக்தி
வாய்த்த தென்று எண்ணேடா
தாண்டவக்கோனே!"[6]

என்று இடைக்காடர் கூறுவதன் மூலம் மனமானது கட்டுக்கடங்காத ஒரு முரட்டு மாடு போன்றது அது நமது கட்டுக்குள் அடங்குமானால் விடுதலையும் வெற்றியும் அடைந்து விடலாம். மன உறுதியையும் நிலைப்படுத்தி மன அழுத்தத்தையும் சமன்படுத்தி உடலைச் சீராக இயங்க வைக்க வேண்டும் அதற்குச் சத்தான உணவு அளிக்க வேண்டும்.நேரத்தைப் பயனுடைய முறையில் நெறிப்படுத்த வேண்டும் இவைச் சரிப்படுத்தப்பட்டால் தான் எண்ணங்களுக்கு நிலைக்களனாக விளங்கும் மனம் சீர்படும்.

"சினம் என்னும் பாம்பு இறந்தால்
தாண்டவக்கோனே- யாவும்
சித்தி என்றே நினையடா
தாண்டவகோனே "[7]

சினம் என்னும் பாம்பானது இறந்தால் தான் சித்தி பெற முடியும் சினம் என்பது சேர்ந்தாரைக் கொல்லும் கொல்லி என்பர். சினத்தால்தான் இரத்த அழுத்தம்,அதிகமான இதயத்துடிப்பு, அட்ரீனல் சுரப்பி அதிகமாகச் சுரத்தல் ஏற்படுகிறது. இதனால் அறிவிலும் உடலிலும் நடத்தையிலும் மாற்றத்தை ஏற்படுத்தி முகபாவனைகளையும் உடல் மொழியையும் மூர்க்கத்தனமாக மாற்றி மனிதனை மிருக நிலைக்கு இழுத்துச் செல்லும். கோபத்தை உளவியலாளர்கள் மூன்று வகைகளாக பிரிக்கின்றனர் திடீர் கோபம், உள்நோக்கத்துடன் கூடிய கோபம் ,எப்பொழுதுமே எரிச்சலோடு இயங்கிக் கொண்டிருக்கும் இயற்கையாகவே மனநிலையோடு ஒன்றிய கோபம் என்பது இதனைத் தவிர்த்தால் மட்டுமே அடுத்த கட்டத்திற்கு மனம் செல்ல ஆயத்தமாகும். மனமும் சினமும் முதலில் ஒழுங்குபட்டால் தான் மனிதனால் தன்னுடைய சிந்தனையை நெறிப்படுத்த இயலும்.

**அவாவெனும் பற்றறுத்தல்**

அவா,ஆவல்,விருப்பம் என்று அழைக்கப்படும் ஆசையானது ஆராயப்பட வேண்டிய அனுபவ உணர்வாகும். நிறுத்தம் இல்லாத பேருந்து போல ஆசையும் ஒரு முடிவுக்கு வர முடியாத

உணர்வாகிறது. அவரவர்களின் சூழ்நிலைகளுக்கு உகந்தவாறு தர்மத்தை மீறாத வகையில் ஆசையை நெறிப்படுத்த வேண்டும் இதற்கு மனவடக்கம் அதிகம் தேவை. தன்னல ஆசையாகவும் பொதுநல ஆசையாகவும் ஆசை வெளிப்படுகிறது அளவிற்கு மீறினால் அமிர்தமும் நஞ்சாகும் என்னும் பழமொழி இதற்கே பொருத்தமாகும்.

" ஆசை என்னும் பசுமாளின்
தாண்டவக்கோனே!
அண்டமெல்லாம் கண்டறிவாய்
தாண்டவகோனே!"[8]

என்று இடைக்காடர் ஆசை என்னும் அவாவை அறுத்தால் தான் அண்டத்தில் மற்றதை அறியும் நுண்ணறிவு செயல்பட தொடங்கும் என்று கூறுகின்றார்.

**தன்னை அறிதல்**

உள்ளத்தினைச் சீர்படுத்துவதனால் உடல் சீராகிறது உடல் சீராகும் பொழுது மனம் ஒழுங்குபடுகிறது மனதை நெறிப்படுத்தும் பொழுது தன்னை அறிதல் எளிமையாகின்றது.

" தன்னை அறிய வேண்டும் அகப்பேய்
சாராமல் சார வேண்டும்
பின்னை அறிவதெல்லாம் அகப்பேய்
பேய் அறிவு ஆகும் அற"[9]

என்று தன் இயல்பை,ஆற்றலை உணர்ந்து தன்னை அறிந்து தீயநெறியானது பிரிவை உருவாக்கும் என்பதை அறிந்து உண்மைத் தன்மையை அறிந்து பேய்த்தன்மை உள்ள அறிவிலிருந்து நீங்கி வாழ வேண்டும் என்கிறார். போட்டியும் பொறாமையும் கொண்ட இவ்வுலகில் அன்னப்பறவை போன்று நீரை விடுத்து பாலை மட்டுமே அருந்த பழக வேண்டும். இவ்வுடலில் உயிர் இருக்கும் பொழுதே அதனைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.அந்தக் குறுகிய காலத்திற்குள் பெரும் பலனைப் பெற தன்னைஅறிதல் அவசியமாகின்றது. வைக்கோல் போரினுள் ஊசியை வைத்து விட்டு தேடுவதைப் போல தேடிக்கொண்டே இருந்தால் வாழ்நாள் முடிந்துவிடும். நீருடன் உப்பு கலந்தது போலவே இறைவன் உடலோடு கலந்துத் தெய்வத்தன்மையோடு இருக்கின்றான். இதனை ஆராய்ந்து உணர்ந்து ஆனந்தமாய் வாழ்தல் வேண்டும் என்று அகப்பை சித்தர் வழிகாட்டுகிறார்.

"ஒப்பனை அல்லவடி -அகப்பேய்
உன் ஆணை சொன்னேனே
அப்புடன் உப்பெனவே-அகப்பேய்
ஆராய்ந்திருப்பாயே "[10]

என்ற பாடல் அடிகளின் வழி உள்ளத்துள் உறைந்திருக்கும் இறைவனைக் காணாமல் உலகில் உள்ள கோயில்கள் எல்லாம் அலைவது உலகப் பொருள் குவியலுக்குள்ளே இறைவனைத் தேடுவது போன்றது. உலகத்து ஆசைகளை வெற்றி கொண்டு ஆணவ மலங்களை விட்டொழித்து இறைவனைச் சிக்கென பிடிக்க மூச்சின் இயக்கத்தை முறையாக அறிந்து செயல்பட வேண்டியதும் அவசியமாகின்றது.

**யோகநிலை கைவரப் பெறுதல்**

பரமாத்மாவைத் தேடி எங்கும் அலைய வேண்டியதில்லை அது தனியே எங்கும் இல்லை நம் உடம்பு தான் பரமாத்மா வாழும் இடம். உடம்பைப் பேணுவதே கடவுள் பணி அதனால் தான் உடம்பினை ஓம்பி உத்தமன் கோவிலைப் பாதுகாத்து வாழ்தல் என்ற கொள்கையை வலியுறுத்தினர். நீர், நிலம், காற்று, நெருப்பு ,ஆகாயம் போன்ற பஞ்சபூதங்களாலான உடலும் அமைகின்றது.

" நாட்டத்தைப் பற்றி நடுவணை சேர்வோர்க்கு
வாட்டங்கள் ஏதுக்கடி- குதம்பாய்
வாட்டங்கள் ஏதுக்கடி"[11]

என்று குதம்பை சித்தர், தன்னுடைய எண்ணங்களை எல்லாம் ஒழித்து விருப்பத்தை மட்டும் புருவம் மத்தியில் செலுத்தி பேயாகப் பயிற்சி செய்து நேர்ந்தால் குறைவின்றி வாட்டமின்றி வாழலாம்.

**ஒழுக்க சிந்தனை அவசியம்**

எண்ணங்கள் சீர் பட்டால் மட்டுமே உடல் மொழியில் அவை வெளிப்படும் அத்தகைய எண்ணச் சீரமைப்பில் உருவாகும் ஒழுக்க நடைமுறைகளைப் பின்பற்றினால் மட்டுமே மனிதன் மனிதனாக வாழ முடியும். மனிதனான பின்பே இறை நிலையை அடைய முடியும் .

"சொல்லரும் சூது பொய் மோசம் செய்தால்
அச்சத்தை முற்றாய்த் துடைத்திடும் நாசம்
நல்ல பக்தி விசுவாசம் எந்த நாளும்
மனிதருக்கு நன்மையாம் நேசம் "[12]

என்று கடுவெளி சித்தர் சுட்டுகின்றார் .

"கஞ்சா புகைக்காதே வெறி
காட்டி மயங்கியே கட் குடிக்காதே
அஞ்ச உயிர் மடியாதே- புத்தி
அற்றவர் அஞ்ஞானத்தின் நூல் படிக்காதே "[13]

என்று மனம் போன போக்கில் சூது, பொய் , அதனைத் தக்க வைத்துக்கொள்ள மோசம் செய்தல், கஞ்சா, கள் முதலியவற்றை புகைத்தும் குடித்தும் வாழ்வது, அஞ்ஞானத்தை அழிக்கும் நூல்களைக் கற்று மனதை சிதைவடைய செய்வது ஆகியவற்றை தவிர்த்து வாழ்தல் வேண்டும் என்று அறிவுரைக் கூறுகின்றார்.

**சமூக அக்கறை செயல்பாடு**

மனிதன் பயனுள்ள வாழ்க்கையை வாழ வேண்டும் அவ்வாறு வாழ்கிறோம் என்பதற்கு அடையாளமே பிற மனிதனிடத்தில் நாம் காட்டும் அக்கறையாகும்.

"ஏழை பனாதிகள் இல்லை என்றால் அவர்க்கு
இருந்தால் அன்னம் கொடுக்க வேண்டும்
நாளை என்று சொல்லுதல் ஆகாதே
என்று நான்மறை வேதம் முழங்குதடி" [14]

என்று கொங்கணர் குறிப்பிடுகின்றார்.தன்னைப் போன்று பிறரையும் நேசித்தால் மட்டுமே பிறருக்கான பசி, வலி, அழுத்தம் ஆகியவற்றை உணர முடியும். இச்சமயம் என்பது கடந்து போனால் போனது போனது தான் மீட்டெடுக்க முடியாது.

"வழக்கழிவுகள் சொல்லாதே கற்பு
மங்கையர் மேல் மனம் வையாதே
பழக்கவாசியைப் பார்த்துக் கொண்டு வாலை
வாதத்தைப் போற்றடி வாலைப் பெண்ணே"[15]

என்று பிறர் மனை நோக்காமையைக் குறிப்பிடுகின்றார். ஆதிக்க மனப்பான்மையை உருவாக்கிக் கொண்டு வஞ்சனையோடு மனிதன் அழிக்க முற்பட்டால் வாழ்வே சூனியமாகிவிடும் என்று கொங்கணர் சமூக அக்கறையோடு செயல்படுமாறு வலியுறுத்துகிறார்.

**தொகுப்புரை**

உடம்பார் அழியின் உயிரார் அழிவார் உத்தமன் உடம்பினுள் உறு பொருள் காணும் வரை உள்ளிருக்க வைத்தல் பேரின்ப நிலை அடைவாரின் கடமை.

பண்பட்ட இறைச்சிந்தனையுடன் தவம் மேற்கொண்டால் தென்னை குறும்பையில் நீர் நுழைந்ததைப் போல உள்ளத்திலே இறைவனைக் காண முடியும்.

பகுத்தறிவை பயன்படுத்தாமல் வேதம், புராணங்களை நம்புவோர் பயனடைய மாட்டார்கள் உண்மை நெறியை உணராமல் அவை வீணான கற்பனையாகவே போய்விடும்.

ஒழுக்கம் தவறாமல் பொய்,சூது,கொலை,கொள்ளை,மது,மங்கை முதலியன மன இருளை உருவாக்குகின்றன.

யோகப் பயிற்சியினாலே மனதையும் உடலையும் ஒழுங்குப்படுத்தி நீண்ட நாட்கள் வாழ முடியும் அறிவால் மட்டுமே அஞ்ஞானத்தை ஒழிக்க முடியும்.

**சான்றெண் விளக்கம்**

1. ஜெகாதா(தொ), சித்தர்களின் வாழ்வும் வாக்கும்,ப.277.
2. விவேகானந்தன்(உ), திருக்குறள்- 331 ப.82
3. ஜெகாதா(தொ), சித்தர்களின் வாழ்வும் வாக்கும்,ப.285
4. விவேகானந்தன்(உ), திருக்குறள்- 72 ,ப.27.
5. ஜெகாதா(தொ), சித்தர்களின் வாழ்வும் வாக்கும்,ப.290.
6. ஜெகாதா(தொ), சித்தர்களின் வாழ்வும் வாக்கும்,ப.687.
7. ஜெகாதா(தொ), சித்தர்களின் வாழ்வும் வாக்கும்,ப.687.
8. ஜெகாதா(தொ), சித்தர்களின் வாழ்வும் வாக்கும்,ப.687.
9. ஜெகாதா(தொ), சித்தர்களின் வாழ்வும் வாக்கும்,ப.425.
10. ஜெகாதா(தொ), சித்தர்களின் வாழ்வும் வாக்கும்,ப.425.
11. ஜெகாதா(தொ), சித்தர்களின் வாழ்வும் வாக்கும்,ப.138.
12. ஜெகாதா(தொ), சித்தர்களின் வாழ்வும் வாக்கும்,ப.958.
13. ஜெகாதா(தொ), சித்தர்களின் வாழ்வும் வாக்கும்,ப.965.
I4. ஜெகாதா(தொ), சித்தர்களின் வாழ்வும் வாக்கும்,ப.462.
15. ஜெகாதா(தொ), சித்தர்களின் வாழ்வும் வாக்கும்,ப.463.

**துணைநூற்பட்டியல்**

1.கருணாநிதி.ஆ(தொ), சித்தர் இலக்கியங்களில் சமூகப் பார்வை,பாவை பப்ளிகேஷன் வெளியீடு, சென்னை. 600014. 2007.

2.கோவிந்தன்.த (தொ), சித்தர் பாடல்கள்,பாவை பப்ளிகேஷன் வெளியீடு, சென்னை-600014,2000.

3. சக்தி பி.சுப்பிரமணியன், கழக வெளியீடு,நெல்லை மாவட்ட சித்தர்கள்,79 -பிரகாசம் சாலை,சென்னை-108, 1944.

4. சாமி சிதம்பரனார், சித்தர்கள் கண்ட விஞ்ஞானம் தத்துவம்,மணிவாசகர் நூலகம், 15- ராஜ வீதி, கோயம்புத்தூர்- 64 10 01.

5. சிவஞானம்.வீ, பட்டினத்தார் பாடல்கள்,விஜயா பதிப்பகம், 20- ராஜ வீதி,கோயம்புத்தூர்- 64 10 01.

6. விவேகானந்தன்.நா (உரை) விவேகானந்தா பதிப்பகம், நாகர்கோவில்-4, 1998.